செ.வெ.எண்:50 நாள்:26.02.2018

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

தமிழகத்தை தொழில் மிகை மாநிலமாக மாற்றும் பொருட்டும், தொழில் முனைவோர்கள் எளிதாக தொழில் தொடங்குவதற்கு வசதியாக தமிழ்நாடு அரசு பலவித முயற்சிகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) மூலம் தொழில் முனைவோர்களுக்கென்று தொழிற்பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளது. தொழில் முனைவோருக்கு தேவையுள்ள அளவுகளில் இட ஒதுக்கீடு என்ற வகையில் உத்தேச மதிப்பு கணக்கிடப்பட்டு தொழிற் பூங்காக்கள் ஏற்படுத்தப்படவுள்ளது.

கரூர் மாவட்டத்தில் புஞ்சைக்காளக்குறிச்சியில் **''ஒருங்கிணைந்த ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தி தொழில் பூங்கா''** நிறுவப்படுவதற்காக ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படவுள்ளது. மேற்படி தொழிற்பூங்காவின் நிலமதிப்பு தோராயமாக ஒரு ஏக்கர் ரூ. 28 லட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்திலுள்ள தொழில் முனைவோர்கள் **''ஒருங்கிணைந்த ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தி தொழில் பூங்கா''**வில் இட ஒதுக்கீடு கோரி தங்களது இசைவினை / விருப்பத்தினை 28.02.2018–க்குள் துணை பொது மேலாளர்–II , தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், சிட்கோ தலைமை அலுவலகம், திரு.வி.க தொழிற்பேட்டை, கிண்டி , சென்னை –600 032 என்ற முகவரிக்கு தங்களது பெயர், முகவரி, மின்னஞ்சல், செல்போன் எண். , தொழிற்திட்டம் , தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தொழில் பூங்கா, தேவையான இடத்தின் அளவு மற்றும் இடத்தினை வாங்கும் முறை ஆகிய தகவல்களுடன் பதிவு செய்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு, www.sidco.tn.nic.in மற்றும் www.indcom.tn.gov.in ஆகிய இணைய தளங்களிலும் தெரிந்து கொள்ளலாம். மேலும், கிளை மேலாளர், சிட்கோ, கரூர் (இருப்பு: ஈரோடு) அவர்களை 0424 2275237 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டும் பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

கரூர்.

HP:D:Steno(D2)18-Misc.lr